T-UN-671

தமிழ்ப் பல்கலைக்கழகச்

# செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2033 சனவரி 2003

## 2002ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வுகள்

| | |
|---|---|
| *08-01-2002* | தத்துவ மையம் - புத்தொளிப் பயிற்சி - நிறைவு விழா |
| *22-01-2002* | மொழியியல் துறை - புத்தொளிப் பயிற்சி - தொடக்க விழா |
| *22-01-2002* | இசைத்துறை - தென்னாப்பிரிக்க ரெங்கசாமிபிள்ளை அறக்கட்டளை - இசைப்போட்டிப் பரிசளிப்பு விழா மற்றும் பாரதி சங்கீத வித்யாலயா அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *30-01-2002* | அரிய கையெழுத்துச்சுவடித்துறை - திருமதி வசுமதிபாரதி - டாக்டர் நாவலர் ச.சோமசுந்தர பாரதியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *07,08-01-2002* | பாவாணர் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம் |
| *11-02-2002* | மொழியியல் துறை - புத்தொளிப் பயிற்சி - நிறைவு விழா |
| *27-02-2002* | நாடகத்துறை - மெலட்டூர் ஞானாம்பாள் சாமிநாதன் நாடகத்தமிழ் அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *01-03-2002* | இந்திய மொழிகள் பள்ளி - புத்தொளிப் பயிற்சி - தொடக்க விழா |
| *05-03-2002* | இசைத்துறை - தென்னாப்பிரிக்க ரெங்கசாமிப்பிள்ளை அறக்கட்டளைச் சொற்பொழிவு - தியாகேசர் குறவஞ்சி மரபிசைப் பாடல்கள் - குறுந்தகடு வெளியீடு |
| *06-03-2002* | இசைத்துறை - புத்தொளிப் பயிற்சி - தொடக்க விழா |
| *06-03-2002* | அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை - ஏ.வி.மெய்யப்பர் - ம.பொ.சி.-நெ.து.சுந்தரவடிவேலு அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *18-03-2002* | இலக்கியத்துறை - காசியா அசீனாநயினார் அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *19-03-2002* | இலக்கியத்துறை - முனைவர் மேஜர் கதிர் மகாதேவன் அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *20-03-2002* | இலக்கியத்துறை - ஔவைத்தமிழ் அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *21-03-2002* | இலக்கியத்துறை - திவான் பகதூர் தி.மு.நாராயணசாமி அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *21-03-2002* | தொல்லறிவியல் துறை - பதிப்புச்செம்மல் அமரர் க.கணபதி நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *21-03-2002* | இந்திய மொழிகள் பள்ளி - புத்தொளிப் பயிற்சி - நிறைவு விழா |
| *23-03-2002* | அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்து[illegible]ண்டல அறிவியல் தமிழ்க் கருத்தரங்கம் I |
| *26-03-2002* | ஓலைச்சுவடித்துறை - காசி குமரகுருபரர் மாநாட்டு நினைவு அறக்கட்டளை - தொடக்கவிழா |
| *26-03-2002* | அகராதியியல் துறை - அகராதியியல் பயிலரங்கு |
| *26-03-2002* | இசைத்துறை - புத்தொளிப் பயிற்சி - நிறைவு விழா |
| *27,28-03-2002* | பழங்குடி மக்கள் ஆய்வு மையம் - பழங்குடியினர் வாழ்வியல் - கருத்தரங்கு |
| *28-03-2002* | அரிய கையெழுத்துச் சுவடித்துறை - பதிப்பு நிறுவனங்கள் - கருத்தரங்கம் |
| *28-03-2002* | கட்டடக்கலைத்துறை - கட்டிடக்கலை, பயன்பாட்டுக் கூறுகள் - கருத்தரங்கம் |
| *28-03-2002* | நாடகத்துறை - தமிழ் நாடகமும் சமூக நல்லிணக்கமும் - கருத்தரங்கம் |
| *28-03-2002* | மொழிபெயர்ப்புத்துறை - அறிவியல் மொழிபெயர்ப்புப் பணிப்பட்டறை - தொடக்க விழா |
| *28,29-03-2002* | அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை - அயல்நாடுகளில் தமிழ்வளர்ச்சி (மொழி,இலக்கியம்,கலை) |
| *30-03-2002* | சித்த மருத்துவத்துறை - இந்திய மூலிகைகளில் மருந்தறிவியல் - தேசியக் கருத்தரங்கம் |
| *30-03-2002* | ஓலைச்சுவடித்துறை - நாவலர் ந.மு.வேங்கடசாமிநாட்டார் நூல்கள் - கருத்தரங்கம் |
| *04-04-2002* | இலக்கியத்துறை - மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழா - அறக்கட்டளைச் சொற்பொழிவு |

| | |
|---|---|
| *11-04-2002* | அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை - முனைவர் ஏசுதாசன் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *15-04-2002* | பதிப்புத்துறை - உலகப் புத்தக ஆண்டு விழா - நூற்காட்சி - சிறப்புத் தள்ளுபடி விற்பனை |
| *26,27-04-2002* | மொழிபெயர்ப்புத்துறை - பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைக் கருத்தரங்கம் |
| *04-05-2002* | அலுவல்நிலைப் பணியாளர்களுக்கான மேலாண்மைப் பயிற்சி - இரா.சுப்பராயலு மேலாண்மையியல் அறக்கட்டளை |
| *23-05-2002* | இந்திய அரசின் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறைச் செயலர் திரு என்.இராசகோபாலன் அவர்கள் வருகை |
| *03-06-2002* | இந்திய மொழிகள் பள்ளி - சிங்கப்பூர்த் தமிழாசிரியர்களுக்கான தமிழ் மொழியும் பண்பாடும் சிறப்புப் பயிற்சி வகுப்பு - தொடக்க விழா |
| *12-06-2002* | இந்திய மொழிகள் பள்ளி - தமிழ்மொழியும் பண்பாடும் சிறப்புப் பயிற்சி வகுப்பு - நிறைவு விழா |
| *12-07-2002* | ஓலைச்சுவடித்துறை, களம்பூர் கோவிந்தசாமி அறக்கட்டளை, பேரூராதீனம் - சிவப்பிரகாசர் இலக்கிய ஆய்வு மாநாடு, கோவை - தொடக்கவிழா. |
| *14-07-2002* | சிவப்பிரகாசர் இலக்கிய ஆய்வு மாநாடு - நிறைவு விழா |
| *20-07-2002* | பசுமை நிறைந்த உலகினிலே - மண்டலப் பயிற்சி முகாம் |
| *01-08-2002* | அகராதியியல் துறை - புத்தொளிப்பயிற்சி - தொடக்க விழா |
| *02-08-2002* | நெய்வேலி-புத்தகக் கண்காட்சி *2002*இல் சிறந்த பதிப்பு நிறுவனமாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை தேர்வு செய்யப்பட்டுப் பாராட்டப் பெறுதல் |
| *19-08-2002* | சுவடிப்புலம் - முதுகலை வகுப்பு-தொடக்க விழா |
| *21-08-2002* | அகராதியியல் துறை - புத்தொளிப் பயிற்சி - நிறைவு விழா |
| *23-08-2002* | நிலஅறிவியல் துறை - பன்னாட்டுக் கருத்தரங்கு - உலகமயமாதல் மற்றும் பேணத்தகு மேம்பாடு - தொடக்க விழா |
| *25-08-2002* | ” ” ” ” ” ” - நிறைவு விழா |
| *27-08-2002* | அயல்நாட்டுத்தமிழ்க்கல்வித்துறை - சிறப்புச் சொற்பொழிவு |
| *28-08-2002* | இசைத்துறை - புத்தொளிப்பயிற்சி - தொடக்க விழா |
| *05-09-2002* | தத்துவ மையம் - கோட்டூர் அரங்கசாமி முதலியார் அறக்கட்டளை வைணவக் கருத்தரங்கம் |
| *13-09-2002* | பதிப்புத்துறை - நூற்காட்சி மற்றும் சிறப்புத் தள்ளுபடி விற்பனை - தொடக்க விழா |
| *17-09-2002* | இசைத்துறை - புத்தொளிப் பயிற்சி - நிறைவு விழா |
| *01-10-2002* | நாட்டுப்புறவியல் துறை - பேரா.முனைவர் ச.மெய்யப்பன் அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *03-10-2002* | அரிய கையெழுத்துச்சுவடித்துறை - திருமதி வசுமதி பாரதி - டாக்டர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *04-10-2002* | மொழிப்புலம் - சிவகாமியின் படைப்பிலக்கியத் திறனாய்வுக் கருத்தரங்கம் |
| *09-10-2002* | சிற்பத்துறை - பல்கலைக்கழக மானியக் குழுவின் புத்தொளிப் பயிற்சி - தொடக்க விழா |
| *07-11-2002* | சமூகஅறிவியல் துறை - புத்தொளிப்பயிற்சியின் தொடக்க விழா |
| *14,15,16-11-2002* | பல்கலைக்கழக மானியக்குழுவின் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட மதிப்பீட்டுக்குழு வல்லுநர்கள் வருகை |
| *25-11-2002* | இலக்கியத்துறை - காசியா அசீனா நயினார் அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *27-11-2002* | சமூக அறிவியல்துறை - புத்தொளிப்பயிற்சி - நிறைவு விழா |
| *28-11-2002* | இந்திய மொழிகள் பள்ளி - திருமதி செண்பகம் சுப்பையா நினைவு அறக்கட்டளை - பேரா.சு.இராசாராம் மணிவிழா மலர் வெளியீடும், தமிழியல் ஆய்வு: இன்றைய போக்குகள் கருத்தரங்கமும் |
| *03-12-2002* | நாட்டுப்புறவியல் துறை - புத்தொளிப் பயிற்சி - தொடக்க விழா |
| *09,10-12-2002* | சித்த மருத்துவம் மற்றும் நிலஅறிவியல் துறைகள் - சித்த மருத்துவம்: ஆய்வு நிறுவனங்களும், மருத்துவத் தொழிலகங்களும் - தேசியக் கருத்தரங்கம் |
| *11-12-2002* | நூலகம் - பேரறிஞர் பவானந்தர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *13,14-12-2002* | கொல்கத்தா தேசிய நூலகம் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகம் - பொது நூலகச் சட்டம் *1954* செயலாக்கம் தொடர்பான பயிற்சிப் பட்டறையும் பதிப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்-பதிப்பாளர்களின் நேருக்கு நேர் கலந்துரையாடலும் |
| *26-12-2002* | கட்டடக்கலைத்துறை - பெருந்தகை பக்தவச்சலனார் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| *27-12-2002* | தொல்லறிவியல்துறை - கிராமப்புற வளர்ச்சியில் அறிவியல் தொழில்நுட்பங்களின் பங்கு - கருத்தரங்கு. |

## நாட்டுப்புறவியல் துறை - புத்தொளிப்பயிற்சி

03-12-2002 முதல் 23-12-2002 வரை நாட்டுப்புறவியல் துறையின் பல்கலைக்கழக மானியக்குழு நிதி நல்கையுடன், "நாட்டுப்புறவியலும் பிறதுறைகளும்" என்ற தலைப்பில் நடைபெற்ற புத்தொளிப்பயிற்சியில் பதினைந்திற்கும் மேற்பட்ட கல்லூரி, பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள், இணைப்பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். தொடக்கவிழாவில் மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னாள் நாட்டுப்புறவியல் துறைத்தலைவர் முனைவர் வி.சரஸ்வதி வேணுகோபால் அவர்கள் சிறப்புரையாற்றினார். நிறைவு விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேரா.முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.

## பதிப்பாளர்கள் மற்றும் நூலாசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை



பொது நூலகச் சட்டம் 1954இன்படி செய்தித்தாள் மற்றும் நூல்களைத் தேசிய நூலகத்திற்கு வழங்க வேண்டும் என்னும் பொருண்மை தொடர்பாகக் கொல்கத்தா தேசிய நூலகமும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகமும் இணைந்து பயிற்சிப்பட்டறையும் பதிப்பாளர்கள் மற்றும் நூலாசிரியர்கள் நேருக்கு நேர் கலந்துரையாடலும் 13, 14-12-2002 ஆகிய இரு நாள்களில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக்கூடத்தில் நடைபெற்றன. இப்பயிற்சிப் பட்டறையின் முக்கிய நோக்கம் பதிப்பாசிரியர்கள் மற்றும் நூலாசிரியர்கள், தாங்கள் வெளியிடும் நூல்களின் ஒரு பிரதியை நூல் வெளியிட்ட ஒரு திங்களுக்குள் இலவசமாகக் கொல்கத்தா தேசிய நூலகத்திற்குக் கட்டாயமாக அனுப்பவேண்டும் என்னும் விழிப்புணர்வைப் பதிப்பாசிரியர்கள் மற்றும் நூலாசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும் என்பதாகும்.

துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பதிவாளர் பொறுப்பு திரு இரா.ஜெயக்குமார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழ்வளர்ச்சி இயக்குநர் முனைவர் ம.இராசேந்திரன், பேரா.முனைவர் கா.பு.அறவாணன், பேரா.முனைவர் ச.வே.சுப்பிரமணியன், திரு இரா.முத்துக்குமாரசாமி, முனைவர் ச.மெய்யப்பன், முனைவர் அ. காளியம்மாள், கொல்கத்தா தேசிய நூலக அலுவலர்கள் முனைவர் இரா. இராமச்சந்திரன், திரு நந்தி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

## சித்த மருத்துவம் மற்றும் நிலஅறிவியல் துறைகள்
## தேசிய கருத்தரங்கு
### சித்த மருத்துவம் (ஆய்வு நிறுவனங்களும் மருத்துவத் தொழிலகங்களும்)

தமிழ்ப் பல்கலைககழகத்தின் சித்த மருத்துவம் மற்றும் நிலஅறிவியல் துறைகள் இணைந்து, மைய அரசின அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினது நல்கையில் "சித்த மருத்துவம்: ஆய்வு நிறுவனங்களும் மருந்து தொழிலகங்களும்" என்னும் தேசியக் கருத்தரங்கை 09,10-12-2002 இரண்டு நாள்களில் நிகழ்த்தினர். பேரா.முனைவா ஞா.விக்டர் இராசமாணிக்கம் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையுரையாற்றினார். புதுதில்லி, இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை ஆலோசகர் முனைவா லக்ஷ்மண பிரசாத் அவர்கள் அறிமுக உரையாற்றினார். மும்பை யு.டி.சி.டி.முன்னாள் இயக்குநர், பத்ம விபூஷன் பேராசிரியர் எம்.எம்.சர்மா அவர்கள் தொடக்கவுரையாற்றினார். தமிழ்நாடு அரசு, இந்திய மருத்துவ முறை ஆணையர், திரு.எம்.எஃப்.ப்ருக்கி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பை வெளியிட்டு உரையாற்றினார். தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற உறுப்பினர் செயலர், முனைவர் எஸ்.முத்துக்குமரன் அவர்கள் நிறைவு விழா உரை நிகழ்த்தினார். மருத்துவர் பேராசிரியர் முனைவர் எஸ்.பிரேமா அவர்கள் நன்றியுரையாற்றினார்.

இத்தேசியக் கருத்தரங்கைத் தொடர்ந்து இலவச சித்த மருத்துவ முகாமும் நடைபெற்றது.

இ.அ.ப. மட்டும் நூலஞ்சல்

# தமிழ்ப் பல்கலைக் கழகம்
## தஞ்சாவூர்


### பவானந்தர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு

11-12-2002 அன்று நூலகத்தில் நடைபெற்ற பேரறிஞர் பவானந்தர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் "நூலகம் - அன்றும் இன்றும்" என்னும் பொருளில் பேராசிரியர் ஆதி. ஸ்ரீமுருகன் அவர்கள் உரைநிகழ்த்தினார்.

### பெருந்தகை பக்தவச்சலனார் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு

தமிழ்ப் பல்கலைக்கழகக் கட்டடக்கலைத் துறையும் தஞ்சைத் தெற்கு ரோட்டரி சங்கமும் இணைந்து நடத்திய பெருந்தகை பக்தவச்சலனார் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு 26-12-2002 அன்று நடைபெற்றது. துணைவேந்தர் பேரா.முனைவர்இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கினார். "நிகழ்த்துக்கலைகளின் வளர்ச்சிக்குத் தென்னகப் பண்பாட்டு மையத்தின் பங்களிப்பு" என்னும் பொருள்பற்றித் தென்னகப் பண்பாட்டு மைய இயக்குநர் க.பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., அவர்களும், "மருத்துவத்துறையும் திருக்கோயில் களும்" என்னும் பொருள் பற்றி அறிவியற் புலத்தலைவர் பேரா.முனைவர் சே.,பிரேமா அவர்களும் சொற்பொழிவாற்றினர். பேரா. முனைவர் கோ.தெய்வ நாயகம் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

### கிராமப்புற வளர்ச்சியில் அறிவியல் தொழில்நுட்பங்களின் பங்கு கருத்தரங்கு



தமிழ்ப் பல்கலைக்கழகத் தொல்லறிவியல் துறையும் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் தமிழ்ப் பல்கலைக்கழகக் கிளையும் இணைந்து, "கிராமப்புற வளர்ச்சியில் அறிவியல் தொழில்நுட்பங்களின் பங்கு" என்ற பொருண்மையில் 27-12-2002 அன்று கருத்தரங்கை நடத்தினர். துணைவேந்தர் பேரா.முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் இக்கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். தஞ்சாவூர், மன்னர் சரபோசி அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் ஜி.பரிமளா, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா.கிருட்டிணமூர்த்தி, முனைவர் சா.பரிமளா, ஆராய்ச்சியாளர் முனைவர் தா.ரெங்கநாதன், முனைவர் பெ.துரைசாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

"பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன"
-முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்

பதிப்பாசிரியர் : இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை
அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் 613001